# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2357/35 - 2023 නොවැම්බර් මස 07 වැනි අඟහරුවාදා - 2023.11.07

*2357/35 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, ஹோமியோபதி சட்டம்***

ஹோமியோபதி மருத்துவ சபைக்கு அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக விண்ணப்பதாரர்களை பெயரிடல்

2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் 09 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் உப அத்தியாயத்தின் பிரகாரம், ஹோமியோபதி மருத்துவ சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவுசெய்து கொள்வதற்காக நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு சாதாரண பதிவேட்டில் பதிவுசெய்துள்ள ஹோமியோபதி மருத்துவர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. இது தொடர்பில் 2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் 03 ஆம் அத்தியாயத்தின் உப அத்தியாயம் (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ) மற்றும் (ஏ) மற்றும் 50(2) ஆம் அத்தியாயத்தின் உப அத்தியாயம் 2(இ) என்பவற்றில், 1997 ஆம் ஆண்டின் ஹோமியோபதி சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யும் ஒழுங்குவிதிகளுக்கு கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

3. 2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் 02 ஆம் அத்தியாயத்தின் 3(ஆ) ஆம் உப அத்தியாயத்தின் பிரகாரம் ஐந்து (05) ஹோமியோபதி மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

4. 2023 ஆம் வருடம் வரை நிலுவை இல்லாமல் வருடாந்தப் பதிவுக் கட்டணத்தைச் செலுத்தியுள்ள ஹோமியோபதி மருத்துவர்கள், முன்மொழிவாளராக அல்லது வாக்காளராக கவனத்திற் கொள்வதற்குத் தகைமை பெறுவர்.

5. சாதாரண பதிவேட்டின் சான்றுபடுத்திய பிரதியொன்று "கொழும்பு 10, வண. பத்தேகம விமலவங்ச மாவத்தை, இல. 385, "சுவசிரிபாய", சுகாதார அமைச்சின் ஹோமியோபதி மருத்துவ சபை மற்றும் சகல மாவட்டச் செயலகங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த ஆவணத்தின் பிரதி மற்றும் மாதிரி நியமனப்பத்திரங்களை சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் அல்லது ஹோமியோபதி மருத்துவ சபையின் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

6. மாதிரி நியமனப்பத்திரங்களுக்கு அமைவான நியமனப்பத்திரங்களுடன் ஹோமியோபதி நிதியத்திற்கு 500.00 ரூபா செலுத்தியமைக்கான அங்கீகரிக்கப்பட்ட பற்றுச்சீட்டின் தெளிவான பிரதியொன்றை இணைத்து 2023.12.07 ஆந் திகதி அல்லது அன்றைய தினத்திற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

மேலதிகச் செயலாளர் (நிருவாகம்),
சுகாதார அமைச்சு, சுதேச மருத்துவப் பிரிவு,
இல. 26, 3 ஆம் தளம், ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு 10.

7. மேற்கூறப்பட்ட 06 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட ஹோமியோபதி மருத்துவர்களின் சாதாரண பெயர் பதிவேட்டில் பெயர் தொடர்பிலான எதிர்ப்புகள் இருந்தால், 2023.11.20 ஆந் திகதி அல்லது அன்றைய தினத்திற்கு முன் பதிவுத் தபாலில் 06 ஆம் இலக்கத்தின் கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

8. 1997 ஆம் ஆண்டின் ஹோமியோபதி சபையைத் தெரிவுசெய்து கொள்ளும் கட்டளையின் 2(2)ஆ ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் வாக்கெடுப்பிற்காக வாக்குச்சீட்டை அனுப்ப வேண்டிய முகவரியை கடித உறையின் இடதுபக்க மூலையில் “முகவரியைக் குறிப்பிடுதல்” எனக் குறிப்பிட்டு மேற்கூறப்பட்ட 06 ஆம் இலக்கத்தின் கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

9. சாதாரண பதிவேடு மற்றும் இயைபுடைய விபரங்களின் பிரதி சகல பதிவுசெய்யப்பட்ட ஹோமியோபதி மருத்துவர்களுக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

10. மேற்கூறப்பட்ட 6 மற்றும் 7 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் 2023.12.07 ஆந் திகதியின் பின் கிடைக்கப்பெறும் வேண்டுகோள் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
“சுவசிரிபாய”, இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10.

EOG 11-0075

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.